நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள். 30.11.2018

2018ம் ஆண்டு நவம்பர் மாதம் 30.11.2018ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.சு.சௌந்தரராஜன்.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

**1)** இந்நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பி) அவர்களின் “அக்டோபர் 2018ம்” மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.3650/2017/சி1)**
**தீர்மான எண்: 273பதிவு செய்யப்பட்டது.**

**2)** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு பழுதடைந்து, மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கும் கீழ்கண்ட பொருட்களை கழிவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விபரம் | எண்ணம் | உத்தேச எடை |
|---|---|---|---|
| 1. | டம்பர் பிளேசர் பின்கள் | 30 | 4500கி |
| 2. | காம்பக்டர் பின்கள் | 15 | 750கி |
| 3. | தள்ளுவண்டிகள் | 5 | 150கி |
| 4. | பழைய இரும்பு குழாய்கள் உதிரிபொருட்கள் | – | 1000கி |
| 5. | பழைய டயர்கள் | 14 | – |

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 6747/2018/இ1)
**தீர்மான எண்: 274 அனுமதிக்கப்பட்டது.**

**3)**போடிநாயக்கனூர் நகராட்சி தலைமை குடிநீர் நிலையத்தில் உள்ள ஜெனரேட்டருக்கு பேட்டரி வாங்குவதற்கும், ஆணையாளர் அவர்களின் குடியிருப்பில் உள்ள UPS க்கு உண்டான பேட்டரி வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.23,000/– குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 6746/2018/இ1)
**தீர்மான எண்: 275 அனுமதிக்கப்பட்டது.**

**4)** போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு Micro Composting Centro வரைபடம் சமர்ப்பிக்க Autocad drawing Vol Construction மூலம் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி வரையப்பட்டது. மேலும் A1 size 1 copy, A3 size 3 நகல் மற்றும் A4 size 10 நகல் எடுக்கப்பட்டது. அதற்கான மொத்த செலவினம் ரூ.9500/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 276 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2896/2018/H2)

**5)**இந்நகராட்சி சிறைக்காடு உரக்கிடங்கில் தினசரி சேகரமாகும் குப்பையில் மக்கும்குப்பை பிரித்தெடுக்கப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காதகுப்பையில் மறுசுழற்சிக்கு பயன்படும் பொருட்கள் பிரித்தெடுக்கப்பட்டது போக எரித்து அழிக்கப்பட வேண்டிய பொருட்களை Bio-Pysolysis kibs மூலம் எரித்து அழிக்கப்பட வேண்டி உள்ளது. அதனை வாங்கவும் அதற்காக உத்தேசமாக ரூ.1,80,000/—ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 6989/2018/இ1)

**தீர்மான எண்: 277 அனுமதிக்கப்பட்டது.**

**6)**போடிநாயக்கனூர் நகராட்சியில் உள்ள **33**வார்டுகளில் **179** சிறுவிசை பம்புகளும் **88**ஆழ்துளை கிணறு அடிபம்புகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி நீர்ஆதாரத்தினை பொதுமக்கள் குடிநீர் தவிர இதர பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி சிறுவிசை பம்புகளையும், ஆழ்துளை கிணறு அடிபம்புகளையும் பராமரிக்க தேவையான பணியாளர்கள் இந்நகராட்சியில் இல்லாததால் ஓராண்டு காலத்திற்கு தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பராமரிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. **10**இலட்சத்தில் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 7183/2018/இ1)

**தீர்மான எண்: 278 அனுமதிக்கப்பட்டது.**

**7)** போடிநாயக்கனூர் நகராட்சி **32**வது வார்டில் உள்ள நகராட்சி ஆணையாளர் குடியிருப்பிற்கு சிறிய மராமத்துப் பணிகள் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,,000/—ஐ பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 6988/2018/இ1)

**தீர்மான எண்: 279 அனுமதிக்கப்பட்டது.**

**8)** போடிநாயக்கனூர் நகராட்சி 33வார்டுகளில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்தவதற்கும் மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்தவற்கும் Toilet cleaning Machine (petrol motor model) 2எண்ணம் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.3,50,000/–ஐ பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 6811/2018/இ1)

**தீர்மான எண்: 280 அனுமதிக்கப்பட்டது.**

**9)** போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகப் பாதுகாப்பிற்காகவும் அரசின் உத்தரவின்படியும் கண்காணிப்பு கேமரா (CCTV CAMERA) பொருத்த வேண்டியுள்ளது. அதனை பொருத்தும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.1,30,000/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 7184/2018/இ1)

**தீர்மான எண்: 281 அனுமதிக்கப்பட்டது.**

**10)** சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு. V.N ஜெயப்பிரகாஷ் என்பவர் இந்நகராட்சி ஆணையரை 7ஆம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு, வழக்கு (வழக்கு எண். CRP(PD)(MD)No.1154/2015–ல்) தொடரப்பட்டது. மேற்படி வழக்கானது 05.10.2018–ல் தள்ளுபடி செய்யப்பட்டு, தீர்ப்பாணை வரப்பெற்றுள்ளது. மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக ஆஜரான அரசு வழக்கறிஞர் திரு.எம்.கருப்பசாமிபாண்டியன் அவர்கள் வாதுரைஞர் கட்டணமாக ரூ.10,000/– வழங்கக்கோரி 06.02.2018–ல் கேட்பு வழங்கியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 6937/2018/எப்1)

**தீர்மான எண்: 282 அனுமதிக்கப்பட்டது**

**11)** இந்நகராட்சிக்கு அனுமதி அரசு ஆணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன்படி 270 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தேவைப்படுவதில் தற்போது 67 பணியாளர்கள் மட்டுமே உள்ளதால் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் Out Sourcing முறையில் பணியமர்த்தி நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி கோரப்பட்டது. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.27176/பி3/2018, நாள்.01.11.2018ல் 70 துப்புரவு பணியாளர்களை தனியார் வாயிலாக Out Sourcing முறையில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தி கொள்ளவும், BIO-METRIC முறையிலான வருகைப் பதிவேட்டினை சரிபார்த்து ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்க வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் மூன்றாண்டு காலத்திற்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் துப்புரவுபணி மேற்கொள்ள அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. தற்போது தனியார் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் பணிக்காலம் 31.12.2018 உடன் முடிவடைவதால், பொதுச் சுகாதாரத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,02,08,888/–இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** 1. ஒப்புதல் அளிக்கலாம்
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல் முறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளது. 70 துப்புரவு பணியாளர்களை

தனியார் வாயிலாக Out Sourcing முறையில் பணியமர்த்தவும்
அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரவும் அது தொடர்பான
விளம்பர செலவினங்களுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3791/2018/எச்2)

**தீர்மான எண்: 283 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**12)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் வாகனங்களுக்கு GPS கருவி பொருத்துவதற்கு 23.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | தொகை / ஒரு எண்ணம் ரூ. |
|---|---|---|
| 1. | YESSIR TECH, TRICHY | 10,150/- |
| 2. | UDAYA FOUNDATION, Madurai. | 9,850/- |
| 3. | K.T.Telematic, Salem | 10,000/- |

**அலுவலகக் குறிப்பு :–** மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய UDAYA FOUNDATION நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்.

(ந.க.எண்.2864/2018/H2)

**தீர்மான எண்: 284 குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெஸர்ஸ் உதயா பவுன்டேசன், மதுரை அவர்களது ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளத்தீர்மானிக்கப்பட்டது.**

**13)** போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TATA ACE (TN60 S2049) வாகனத்தில் உள்ள கீழ்க்கண்ட பழுதுகள் ஏற்பட்டுள்ளது.

1. Cluti Plate
2. Pressure Plate
3. Hitter Plug
4. Gear box noice
5. Diesel Nozzle Block.,

மேற்கண்ட பழுதுகளை பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி உடன் சரிசெய்திட விலைப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
1) மன்றம் அளிக்கலாம்.
2) பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருத ஆணையாளரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரிய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.6460/2018/H2)

**தீர்மான எண்: 285 அனுமதிக்கப்பட்டது.**

**14)** போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் காம்பக்டர் லாரி (TN60 AY 1176) கீழ்க்கண்டவாறு பழுதுகள் ஏற்பட்டுள்ளது.

அ) பழுதூக்கும் ஜாக்கியின் ஆயில்சீல் மாற்றுதல்
ஆ) கியர் லிவரின் கீழ் உள்ள உருண்டை ரிப்பேர்
இ) செல்ப் மோட்டார் ரிப்பேர்

எனவே மேற்கண்ட பழுதுகளை பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி உடன் சரி செய்திட விலைப்புள்ளி கோரவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

**1)** மன்றம் அளிக்கலாம்.

**2)** பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி ஆணையாளரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரிய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.6218/2018/H2)

**தீர்மான எண்: 286 அனுமதிக்கப்பட்டது.**

**தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**
**போடிநாயக்கனூர் நகராட்சி.**